IN THE COURT OF DISTRICT MUNSIF, GUDIYATTAM, VELLORE DISTRICT.
**OS.No.205/2015**

| **DEPOSITION OF WITNESS** | **PW.1** |
|---|---|

| NAME | கிருபாகரன் |
|---|---|

Solemnly affirmed in accordance with the provisions Act of 1873 on the day of 02.10.2024

**பிரதிவாதி தரப்பு குறுக்குவிசாரணை**

1. இந்த வழக்கை நான் தான் தாக்கல் செய்தேன். எனது அம்மாவிற்கு அரசாங்கம் கொடுத்த வீட்டிற்காக தாவா தாக்கல் செய்தேன். அரசாங்கம் காலி இடமாக தான் கொடுத்தது. எனது தாயார் பெயர் கருப்பாயி. வா.சா.ஆ. 1 பட்டா எனது அம்மாவிற்கு அரசாங்கம் கொடுத்தது என்றால் சரிதான்.

2. எனது தகப்பனார் பெயர் கோபால். கோபாலிற்கு 2 ஆண் பிள்ளைகள், 3 பெண் பிள்ளைகள் ஆவார்கள். 2 ஆவது பிரதிவாதி பன்னீர் செல்வம் எனது சகோதரர். எனது சகோதரிகள் திலகா, வசந்தா, சம்பத்ராணி 1, 3, 4 பிரதிவாதிகள் ஆவார்கள்.

3. 2 வது பிரதிவாதியின் மனைவி பெயர் வளர்மதி ஆவார். எனது சகோதரர் பன்னீர் செல்வத்துக்கும், வளர்மதிக்கும் 3 குழந்தைகள் ஆகும். 5 வது பிரதிவாதி முருகன் 2 வது பிரதிவாதியின் மகன் ஆவார். ரஞ்சித்குமார் மற்றும் ஈஸ்வரி மற்ற 2 பிள்ளைகள் ஆவார்கள்.

4. ஈஸ்வரிக்கு திருமணம் ஆகிவிட்டது என்றால் சரிதான். 2 வது பிரதிவாதி பன்னீர்செல்வத்துக்கும் அவரது மனைவி வளர்மதிக்கும் தகராறு என்றால் சரிதான். அதனால் வளர்மதியும், ரஞ்சித்குமாரும் என்னுடன் தான் வசித்து வருகிறார்கள் என்றால் சரிதான்.

5. நான் வளர்மதியும், ரஞ்சித்குமாரும் மனை எண்.107 ல் வசித்து வருகிறோம் என்றால் சரிதான். எனது தாயார் கருப்பாயி முருகன் பெயருக்கு தான செட்டில்மெண்ட் எழுதி வைத்த விவரம் எனக்கு தெரியாது.

6. பிரதிவாதி இந்த வழக்கில் என்ன பதில் தாக்கல் செய்துள்ளார் என்ற விவரம் எனக்கு தெரியாது. எனது தாயார் கருப்பாயி தானசெட்டில்மெண்ட் 26.02.2003 ஆம் ஆண்டு எழுதி வைத்த விவரம் 5 வது பிரதிவாதி தனது பதிலுரையில் குறிப்பிட்டுள்ள விவரம் எனக்கு

தெரியாது.  நான் கையெழுத்து போடுவேன். நான் 6 ஆம் வகுப்பு வரை படித்துள்ளேன். என்னிடம் காட்டப்படும்  இவ்வழக்கின் இடைக்கால மனு எண்.1/23 உள்ள பிரமாண வாக்குமூலத்தில் 07.02.2023 இல் போடப்பட்டுள்ள கையெழுத்து என்னுடையது அல்ல. அந்த  பிரமாண வாக்குமூலம் நீ.ம.சா.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

7. என்னிடம் காட்டப்படும் இவ்வழக்கின் இடைக்கால மனு எண். 264/2019 இல் உள்ள பிரமாண வாக்குமூலத்தில் 30.07.2019 அன்று போடப்பட்டுள்ள கையெழுத்து என்னுடையது அல்ல. அந்த  பிரமாண வாக்குமூலம் நீ.ம.சா.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

8. என்னிடம் காட்டப்படும் இவ்வழக்கின் நான் தாக்கல் செய்துள்ள வா.சா.1 முதன்மை பிரமாண வாக்குமூலத்தில் 09.07.2019 அன்று போடப்பட்டுள்ள கையெழுத்து என்னுடையது தான். ஆவண பட்டியல் கீழ் போடப்பட்டுள்ள கையெழுத்து என்னுடையது அல்ல. அந்த முதன்மை பிரமாண வாக்குமூலம் நீ.ம.சா.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

9.  என்னிடம் காட்டப்படும் இவ்வழக்கின் வக்காலத்து நாமாவில் 14.08.2015 அன்று போடப்பட்டுள்ள கையெழுத்து என்னுடையது அல்ல. அந்த  வக்காலத்து நாமா நீ.ம.சா.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

10. என்னிடம் காட்டப்படும் இவ்வழக்கின் இடைக்கால மனு எண்.264/19 ல் தாக்கல் செய்துள்ள Ex.R1 ஆன 26.02.2003 பதிவு செய்யப்பட்ட தானசெட்டில்மெண்ட் பத்திரத்தில் சாட்சி என்ற இடத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது அல்ல.  நான் கிருபாகரன் என்று தான் கையொப்பம் செய்வேன் அதில் கிருபானந்தம் என்று உள்ளது.

11. நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள தாவா, வக்காலத்து மற்றும் பிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது இல்லை என்ற சாட்சியம் அளிக்கிறேன் அதுபோல் தான் Ex.R1 ஆன 26.02.2003 பதிவு செய்யப்பட்ட தானசெட்டில்மெண்ட் பத்திரத்தில் சாட்சி என்ற இடத்தில் உள்ள கையெழுத்தும் என்னுடையது அல்ல என்று சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

12. நான் எப்போதும் கிருபாகரன் என்று தான் கையொப்பம் செய்வேன்  வேறு எவ்வாறும் கையொப்பம் செய்யமாட்டேன். நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த ஆவணங்களிலே மாறி மாறி தான் கையொப்பம் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

13. 26.02.2003 இல் எனது தாயார் 5 ஆம் பிரதிவாதிக்கு தானசெட்டில்மெண்ட் எழுதி வைத்தார் என்றால் அப்போது எனது தாயார் அந்த சூழ்நிலையில் இல்லை படுத்த இடத்திலேயே இருந்தார். கையெழுத்துக்கு பதில் கைரேகை வைத்துவிட்டுனர். எனது தாயார் மெண்டல் மாதிரி இருந்தார்.

14. இவ்வழக்கின் இடைக்கால மனு எண்.264/19 இல் தாக்கல் செய்துள்ள Ex.R1 ஆன 26.02.2003 பதிவு செய்யப்பட்ட தானசெட்டில்மெண்ட் பத்திரத்தில் எனது தாயாரின் கையெழுத்து பதில் கைரேகை வைத்துவிட்டார்கள் என்றால் சரிதான்.

15. எனது தாயாரின் உடல் மற்றும் மன நிலை சரியில்லாத விவரத்தை எனது தாவாவிலும் எனது முதன்மை பிரமாண வாக்குமூலத்திலும் சொல்லவில்லை என்றால் சரிதான்.

16. இவ்வழக்கின் இடைக்கால மனு எண்.264/19 இல் தாக்கல் செய்துள்ள Ex.R1 ஆன 26.02.2003 பதிவு செய்யப்பட்ட தானசெட்டில்மெண்ட் பத்திரத்தில் எனது தாயாரின் கையெழுத்து பதில் கைரேகை வாங்கிவிட்டார்கள் என்ற விவரத்தையும் எனது முதன்மை பிரமாண வாக்குமூலத்திலும் எனது தாவாவிலும் சொல்லவில்லை என்றால் சரியல்ல.

17. 26.02.2003 எனது தாயார் தானசெட்டில்மெண்ட் பத்திரத்தை நல்ல மனநிலைமையுடன் சுயநினைவுடன் தான் எழுதி வைத்தார் என்றாலும் அந்த விவரம் எனக்கு தெரிந்து அதில் நான் சாட்சி கையொப்பம் செய்தேன் என்றால் சரியல்ல.

18. நான் இந்த வழக்கு மனை எண். 108 ற்கு தாக்கல் செய்துள்ளேன். மனை எண்.107 யும் எனது தாயார் பெயரில் தான் பட்டா உள்ளது. மனை எண. 107 –ஐ இத்தாவாவில் சேர்க்கவில்லை என்றால் சரியல்ல. அதை சேர்த்து தான் நான் இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன். எனது தாயார் எப்போது இறந்தார் என்று எனக்கு நியாபகம் இல்லை. சுமார் 20 ஆண்டுகள் இருக்கும் என்றார் சரிதான்.

19. தாவா சொத்தில் மோதி திட்டத்தில் வீடு கட்டியுள்ளார்கள் என்றால் சரிதான். மோதி பிரதமர் திட்டத்தில் முருகன் பெயரில் தான் திட்டம் வழங்கினார்கள் என்றால் சரிதான்.

20. எனது குடும்ப விரோதத்தை கருத்தில் கொண்டு தவறான தாவா மற்றும் முதல் விசாரணை வாக்குமூலம் தாககல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எனது வழக்கு உண்மையான வழக்கு இல்லை என்பதால் தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.

Taken down by me in open court read over of the deponent and acknowledged by her/him to be correct.

Sd/.M.N.Rajanandhivarmasiva,
District Munsif,
Gudiyattam.